DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 7

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் சீனிவாசன் (Lw - 8) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 12.05.2026**

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.11.2024ந் தேதி மாலை 05.30 மணிக்கு நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமணையில் பணியிலிருந்தேன்.

அப்போது தினேஷ்குமார் என்பவர் 108 ஆம்புலன்ஸ்மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். தினேஷ்குமாரை விசாரித்த போது அவரை 07.11.2024ந் தேதி மாலை 03.15 மணியளவில் சேந்தமங்கலம் காந்திநகரில் வைத்து ஒரு தெரிந்த நபர் சூரி கத்தியால் தன்னை இடது பக்க வயிற்றில் கிழித்துவிட்டதாகவும் பின்பு தான் சிங்களாந்தபுரத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று முதல் உதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்ததாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு இடது பக்க வயிற்றில் குத்துக்காயம் ஏற்பட்டு தசை கிழிந்து வெளியே வந்திருந்தது. அவரை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். மேற்படி தினேஷ்குமாருக்கு

சி.டி.ஸ்கேன் செய்து பார்த்தபோது அவருக்கு சிறுகுடலில் 6 இடங்களில் குத்து காயம் இருந்தது. அவருக்கு அறுவை சிகிச்சை செய்து சிகிச்சை அளித்தேன். தினேஷ்குமார் 17.11.2024ம் தேதி வரை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார்.

07.11.2024ந் தேதி முதல் 17.11.2024ம் தேதி வரை தினேஷ்குமாருக்கு நாமக்கல் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை குறித்த ஆவணங்களின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் காயம் என்று சான்று வழங்கினேன். **(**நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை விபத்து பதிவேடு அ**.**சா**.**ஆ**.4** ஆகவும் காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதம் எதையும் போலிசார் என்னிடம் காட்டி விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் போலிசாரிடம் சி.டி.ஸ்கேன் மற்றும் எக்ரே ஆகியேவற்றை ஒப்படைத்தேனா என்றால் இல்லை. மேற்படி காயத்தின் மூலம் நிரந்தர உருக்குழைவோ சிதைவோ இருந்ததா என்றால் இல்லை. சாட்சி மீண்டும் வாதி தினேஷ்குமாருக்கு குடலில் ஒரு பகுதியை அறுவை சிகிச்சை செய்து தையல் போடப்பட்டது என சாட்சியம் அளிக்கிறார். காயம்பட்ட நபர் என்னிடம் தொடர்ந்து 15 நாட்கள் சிகிச்சையில் இல்லை என்றால் சரிதான். 11 நாட்கள் தான் இருந்தார். காயச்சான்றிதழில் வாதிக்கு ஏற்பட்ட காயத்தின் அளவு குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக ஒரு நபர் கூர்மையான பொருளின் மீது தவறி கீழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் வாதிக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாக சான்று வழங்கினேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**